

# தாழ்மையினால் ஒற்றுமை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** பிலி 2:1–11; எரே 17:9; பிலி 4:8; 1கொரி 8:2; ரோமர் 8:3; எபி 2:14–18.

**மனன வசனம்:** நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். பிலிப்பியர் 2:2.

ஒற்றுமையே வலிமை. இந்த உண்மையை அறிந்திருப்பது வேறு, அதன்படி நடப்பது வேறு. நாம் ஒற்றுமையை நிலைநாட்ட இயன்றமட்டும் முயன்றாலும், சில சமயங்களில் தோற்கலாம், அது வேறு, அதைக் குறைத்து மதிப்பிடுவது வேறு. அதனால்தான் பிலிப்பிய விசுவாசிகள், ‘இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்திக்கும்படி’ பவுல் விரும்புகிறார்.

இயேசுவின் போதனையையும் முன்மாதிரியையும் அடிப்படையாக வைத்து, ஒற்றுமையின் அவசியத்தை பவுல் கூறுகிறார். புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்தக் கருத்து காணப்படுகிறது. பரலோகத்தில் பதவிக்கும் அதிகாரத்திற்கும் ஆசைப்பட்ட பெருமைகொண்ட ஒரு தூதனால்தான், பிரபஞ்சத்தில் ஒற்றுமைக் குலைவு உண்டானது; பரிபூரணமான சூழ்நிலை நிலவிய அந்த இடத்திலும் அந்த ஆசை வேகமாகப் பரவியது. ஏசா 14:12-14. பிறகு ஏதேன் தோட்டத்தில் அதே மனநிலை வெளிப்பட்டது; தேவன் விதித்திருந்த கட்டளைகளில் அதிருப்தி வந்தது; தேவன் திட்டமிட்டிருந்ததைவிட மேலான ஒரு நிலையை அடைய ஆசைப்பட்டதால், அங்கும் காலூன்றியது.

திருச்சபையில் ஒற்றுமைக்கான அடிப்படைபற்றி இந்த வாரம் பார்ப்போம். குறிப்பாக, இயேசு தம்மைத் தாழ்த்தியதை ஆராய்வோம். அவரையே நோக்கிப் பார்ப்பதால், அவரைப்போல வளருவதற்கான வழிகளையும் கற்றுக்கொள்ளலாம்.

*2026, ஜனவரி 24 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# பிலிப்பியில் பிரிவினை

**திருச்சபையில் பிரிவினைக்கு வழிநடத்தக்கூடிய காரணிகள் என்ன? பவுல் அதற்குச் சொல்கிற தீர்வு என்ன? பிலி 2:1-3.**

---

---

தான் ஸ்தாபித்து, அதிகமாக நேசித்த ஒரு திருச்சபையில் பகையும் போட்டி மனப்பான்மையும் நிறைந்திருந்தகைக் கண்ட பவுல் மிகவும் வருந்தினார். அந்தப் பிரச்சினைகளை நாம் புரிந்துகொள்வதற்கு அவர் பயன்படுத்துகிற வார்த்தைகள் உதவுகின்றன.

'வாது' என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு, 'சுயநல ஆசை', 'கட்சிமனப்பான்மை' என்று அர்த்தம். ரோமில் பவுலை எதிர்த்து, கிறிஸ்துவின் நோக்கத்தைவிட தங்களை முன்னிறுத்த முயன்ற சுயநலவாதிகளைக் குறிப்பிடுவதற்கு பிலி 1:16இல் இதே வார்த்தை வருகிறது. இந்த 'சுநல ஆசை' மாம்சக்கிரியைகளில் ஒன்று. கலா 5:20. 'எங்கே பொறாமையும் சுயநல ஆசையும் இருக்கின்றதோ, அங்கே ஒழுங்கீனமும் எல்லாவிதத் தீயசெயல்களும் இருக்கின்றன' என்று யாக்கோபு சொல்கிறார். யாக் 3:16. (சமகால மொழிபெயர்ப்பு). 'வீண் பெருமை' என்பதற்கான கிரேக்க வார்த்தை இங்குமட்டுமே வருகிறது; துணிகரம், வெற்றுப்பெருமை, திமிரான மதமதப்பு போன்றவற்றைச் சுட்டிக்காட்ட பிற புத்தகங்களில் இந்த வார்த்தை வருகிறது. இதற்கு ஒப்பான ஒரு வார்த்தையை கலாத்தியரில் பவுல் பயன்படுத்துகிறார்: 'வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம்.' கலா 5:26.

இந்தப் பிரச்சினைகளுக்கு பவுல் சொல்கிற தீர்வுகளைக் கவனியுங்கள்:

1. **கிறிஸ்துவுக்குள் ஆறுதல்**. கிறிஸ்துவின் முன்மாதிரியே தீர்வு என்று ஊக்குவிக்கிறார்.
2. **அன்பினால் தேறுதல்.** 'நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்' என்று இயேசுவின் தெய்வீக அன்பைக் காட்டுமாறு கட்டளையிடுகிறார். யோவான் 15:12.
3. **ஆவியின் ஐக்கியம்.** ஆவியானவரின் பிரசன்னத்தால் ஆதிகாலத் திருச்சபையில் கிறிஸ்தவ உறவு உருவானது. அப் 2:42; 2கொரி 13:14.
4. **உருக்கமான பட்சம்** (அல்லது மனதுருக்கம்). இது கிறிஸ்துவின் வாழ்க்கையில் வெளிப்பட்டு வந்த தெய்வீக குணம். மத் 9:36; மத் 20:34; மாற்கு 1:41. இக்குணம், நல்ல சமாரியன் மற்றும் கெட்டகுமாரன் உவமையில் எடுத்துக்காட்டப்படுகிறது. லூக் 10:33; லூக் 15:20.
5. **இரக்கம்.** இயேசு வெளிப்படுத்திய இந்தக் குணத்தை அவரது பிள்ளைகளும் வெளிப்படுத்த வேண்டும். லூக் 6:36.
6. **ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்தல்.** எத்தகைய ஒரு காட்சி! இதைவிட ஒற்றுமையின் முக்கியத்துவத்தை பவுல் எப்படி வெளிப்படுத்தியிருக்கமுடியும்! 'கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே' நம்மிலும் இருக்கவேண்டுமென பவுல் சொல்கிறார். பிலி 2:5.

# ஒற்றுமையின் ஆதாரம்

ஒற்றுமையாக இருங்கள் என்பதை நான்கு வெவ்வேறு வழிகளில் பிலி 2:2இல் பவுல் வலியுறுத்துகிறார். அதில் சிந்தைக்கும் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் முக்கியப் பங்குண்டு. மதத்தலைவர்கள் வெளிப்புற நடத்தையை முக்கியப்படுத்தினார்கள்; ஆனால் நம் சிந்தைகளும் உணர்வுகளும் சரியாக இருக்க வேண்டுமென்று இயேசு வலியுறுத்தினார். உதாரணமாக, ஒரு பணக்கார அதிகாரி தான் கற்பனையின்படியே நடந்துவருவதாகச் சொன்னான். ஆனால், இயேசு அவனுக்கு வைத்த சோதனை என்ன? அவனுக்கு உண்டானதையெல்லாம் விற்று, ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, பிறகு தம்மைப் பின்பற்றும்படி சொன்னார். சிந்தையிலிருந்து புறப்படுவதுதான் ஒருவனைத் தீட்டுப்படுத்தும் என்று கூறினார்: 'இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்.' மத் 15:19. 'இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.' மத் 12:34.

**திருச்சபையில் ஒற்றுமை காணப்பட பவுல் வலியுறுத்துகிற நடைமுறை வழிகள் என்ன? பிலி 2:3,4.**

---

மனத்தாழ்மை முக்கியமென்று பவுல் வலியுறுத்துகிறார். ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணவேண்டும்; தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்கவேண்டும். செய்வதைவிட சொல்வது எளிது, இல்லையா? ஆனால் நம் பழக்கவழக்கங்களில் இவற்றை மனதில் வைத்து செயல்படவேண்டும். ஒருவரிடம் பேசும்போது, அவர் சொல்வதைக் கவனிக்காமல், நாம் நினைப்பதைச் சொல்வதிலேயே கவனம் செலுத்துகிறோம்; அதனால் பேசுகிறவரின் கண்ணோட்டத்திலிருந்து அந்த விஷயத்தைப் பார்க்க முடிவதில்லை. இவ்வாறு காதுகொடுத்துக் கேட்கத் தவறுவதால் தவறான புரிதல்கள் உண்டாகி, சச்சரவுகள் உருவாகின்றன. அடுத்தவர் பேசுவதைக் கேட்டு, அவரைப் புரிந்துகொள்ளவதே ஆரோக்கியமான தகவல்தொடர்பையும் நம்பிக்கையையும் வளர்ப்பதற்கு முதல் படி.

'தூய ஆவி அருளும் ஒருமைப்பாடு' நம்மை 'அமைதியுடன் இணைந்து' வாழவைப்பதாக பவுல் கூறுகிறார். எபே 4:3. பொதுமொழிபெயர்ப்பு. திருச்சபையில் சச்சரவு உருவாகும்போது, பரிசுத்த ஆவியானவர் அந்தக் கொந்தளிப்பை அடக்கி, நமக்குள் ஒற்றுமையைக் கொடுத்து, இணக்கத்தை உருவாக்க முடியும். அதே அதிகாரத்தில், நாம் 'தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகிறோம்' என்று பவுல் கூறுகிறார். எபே 4:13. இரண்டும் தொடர்புடையவை. கிறிஸ்துவையும் அவரது போதனைகளையும் அறிவதால் வருகிற விசுவாசமும், வேதாகமப் புரிதலும், நம்மிடையே ஒற்றுமை நிலவுவதற்கு இன்றியமையாதவை.

---

**நாம் சுயத்திற்கு மரிப்பது அவசியம். அது நம்மைவிட மற்றவர்களை நாம் மேன்மையானவர்களாக எண்ணுவதற்கு எவ்வாறு வழிநடத்தக்கூடும்? அவ்வாறு வாழ்வதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? நாம் எல்லாருமே அவ்வாறு வாழ்ந்தால், நம் உறவுகள் எவ்வளவு வித்தியாசமாக இருக்கும்?**

# மூளையில் பதிப்பதா, அறுவைசிகிச்சையா?

கணினியின் செயலாக்கத் திறனை மனித மூளையுடன் இணைக்கிற தொழில் நுட்பம்குறித்து உலகம்முழுவதிலும் பல்வேறு நிறுவனங்கள் ஆராய்ந்து வருகின்றன. சிந்தைகளை கணினிகளுடன் இணைத்துவிட்டால், கணினிகள்மூலம் சிந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாமென விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். மனித மூளை பதிவுகளைப் பயன்படுத்துவது நேர்மறையான முடிவுகளைக் கொடுக்கலாம், கால்-கை வலிப்பு, மனச்சோர்வு மற்றும் பார்கின்சன் நோயைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் அதை தவறான விதத்திலும் பயன்படுத்த வாய்ப்புள்ளது. இவ்வாறு சிந்தையைக் கட்டுப்படுத்தப் போகிற காலம் வெகுதூரத்தில் இல்லை.

அவ்வாறு கட்டுப்படுத்துகிற சில வழிகள் ஏற்கனவே வந்துவிட்டன. நம் மனதை, அதிகபட்ச திறனுள்ள ஒரு கணினி எனலாம். தினமும் நம் மனதிற்குள் செல்கிற தகவல்கள், நம் மனதை 'நிரல்படுத்துகின்றன'; நம் சிந்தைகளைக் கட்டுப்படுத்தி, செயல்படவைக்கின்றன. நாம் ஊடகங்களில் மூழ்கும்போது, உலகப்பிரகாரமான சிந்தையுள்ளவர்களின் எண்ணங்கள் நம் சிந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; நாமும் அதேபோல யோசிக்க ஆரம்பிக்கிறோம். இவ்வாறு மற்றவர்களுடைய சிந்தைகள் நம் சிந்தைகளில் பதிக்கப்படுகின்றன.

நாம் இயேசுவைப்போல 'ஆவியின் சிந்தை' உடையவர்களாக இருக்க வேண்டும். ரோமர் 8:6. 'தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்;' இதற்கு எதிரானது, 'உலகத்தின் ஆவி' என்று பவுல் கூறுகிறார். 1கொரி 2:11,12. நம்முடைய ஆசிரியர் யார்? நாம் கற்றுக்கொள்வது என்ன?

**கிறிஸ்துவின் 'சிந்தையை' பெற்றிருப்பது என்றால் என்ன? பிலி 2:5.**

நம் மனதை நாம் மாற்றிக்கொள்ளலாம், ஆனால் நம் இருதயத்தை மாற்ற முடியாது; தேவன்மட்டுமே மாற்றமுடியும். தேவ வார்த்தையாகிய 'ஆவியின் பட்டயத்தால்', பரிசுத்த ஆவியானவர் நம்மில் இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். எபே 6:17. அவரது வார்த்தை 'ஜீவனும் வல்லமையும்' உள்ளது; 'இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.' எபி 4:12. ஆவியானவர்மூலமாக மட்டுமே நம்மை நாம் உண்மையில் அறியமுடியும்; ஏனென்றால் நம் இருதயம் இயல்பாகவே வஞ்சனையுள்ளது. எரே 17:9. 'கேடுள்ளது' என்பதற்கான எபிரெய வார்த்தை **அகாவ்;** இதற்கு, சமதளமற்ற தரை என்று அர்த்தம். அது காலை இடறி, விழவைக்கும். வாதிக்கிற, கோணலான, சீரற்ற சிந்தனைகளையும் குறிக்கலாம். 'தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியும்படி' நம் சிந்தை 'புதிதாகிறதினாலே' நாம் மறுரூபமாக்கப்படவேண்டும். ரோமர் 12:2.

---

**'கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்' என்று பவுல் சொல்கிறார். பிலி 4:8. இதன்படி நடப்பது ஏன் முக்கியம்?**

# கிறிஸ்துவின் சிந்தை

''நான்தான் மிகச்சிறந்தவன்'' என்று முகமது அலி ஒருமுறை சொன்னார். 1963ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், உலக ஹெவிவெய்ட் குத்துச்சண்டை பட்டத்தை வெல்வதற்கு ஆறுமாதத்திற்குமுன் 'நான்தான் மிகச்சிறந்தவன்' என்கிற தலைப்பில் ஒரு தனிப்பாடலையும் வெளியிட்டார். அலி மிகச்சிறந்த தடகள வீரர் என்பதில் சந்தேகமில்லை, ஆனால் கிறிஸ்துவின் சிந்தையைப் பெறவிரும்புகிறவருக்கு அவர் நல்ல உதாரணம் இல்லை.

இயேசுவோ கொஞ்சமும் பாவமில்லாதவராக இருந்தார். 'எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்' சிந்தையால்கூட அவர் பாவம்செய்யவில்லை. எபி 4:15. 'அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்.' எபி 5:8. பிதாவின் சித்தத்திற்கு இயேசு பரிபூரணமாகக் கீழ்ப்படிந்தார். அவர் கீழ்ப்படிவது பல சமயங்களில் கடினமாக இருந்தபோதிலும், ஒரு கணம்கூட அதற்கு அவர் மறுக்கவில்லை.

**வேதாகமத்திலேயே மிகவும் ஆற்றல்மிக்க பகுதி பிலி 2:5-8. இங்கு நமக்கு பவுல் சொல்வது என்ன? இந்த வார்த்தைகளின் அர்த்தம் என்ன? மிகமுக்கியமாக, இங்குள்ள நியதியை நாம் நம் வாழ்க்கையில் எவ்வாறு கடைப்பிடிக்கலாம்?**

---

தேவனும் தேவனுக்கு சமமானவருமான இயேசு, மனித மாம்சத்தைத் தரித்தது மட்டுமல்லாமல், 'அடிமையானார்'. இதற்கான கிரேக்க வார்த்தை **டூலா**; வேலைக்காரன், அடிமை என்று அர்த்தம். பிறகு, நம் பாவங்களுக்கான பலியாக தம்மை ஒப்புக்கொடுத்தார்! அவர் 'நமக்காகச் சாபமானார்' என்றும், இன்னொரு இடத்தில் பவுல் சொல்கிறார். கலா 3:13. நம் சிருஷ்டிகராகிய தேவன், நம்மை மீட்கும்படிக்கு சிலுவையில் மரித்தார்; அதனால் நமக்காக சாபமானார்.

இங்கு பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? இந்த வசனம் சொல்கிறபடி நாம் எவ்வாறு நடக்கலாம்? எவ்வாறு அவரைப்போல நம்மைத் தாழ்த்தலாம், பிறர் நன்மைக்காக நம்மைத் தியாகம்செய்யலாம்?

'உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்' என்று இயேசு சொன்னார். மத் 23:11,12. பிலி 2:5-8 சொல்வதையே பல வழிகளில் இந்த வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

'ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல்' என்று முன்பு பிலி 2:3இல் சொன்னதையே இங்கு விளக்கமாக பவுல் சொல்கிறார்.

---

**பிலி 2:5-8 சொல்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றிற்கு நம் பிரதிவினை என்னவாக இருக்கவேண்டும்? நாம் நம் முழங்காலில் விழுந்து, கிறிஸ்துவைத் தொழுவதைவிட வேறு என்ன பிரதிவினை அவர் நமக்காகச் செய்தவற்றிற்கு 'போதுமானதாக' இருக்கும்? கிறிஸ்து ஏற்கனவே நமக்காகச் செய்தவற்றில் நம் கிரியைகளும் ஏதாவது செய்யமுடியும் என்று நினைப்பது ஏன் தவறானது?**

# தேவபக்திக்குரிய இரகசியம்

'ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணினால், ஒன்றையும் அறியவேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை.' 1கொரி 8:2. எந்தவொரு துறையிலும், எல்லாம் தெரிந்தவர் எவரும் இல்லை. எந்தத் துறையானாலும், நாம் புதிதாக அறிந்துகொள்ளவேண்டியவை இருக்கும். அப்படியானால், தேவதுவம் மற்றும் கிறிஸ்துவின் மனித பிறப்புடன் சம்பந்தப்பட்ட நித்திய எதார்த்தங்களில் இது எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கவேண்டும்? கிறிஸ்து ஒரு மனிதனாக வருவதற்கு தம்மைத் தாழ்த்தியது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்று பவுல் பல இடங்களில் குறிப்பிடுகிறார். இந்தக் கருத்துப்பற்றி ஆராய நமக்கு நித்தியகாலமும் போதாது.

**இயேசு தம்மைத் தாழ்த்தி, மனித ரூபம் எடுத்ததற்கான காரணம் என்ன? ரோமர் 8:3; எபி 2:14-18;4:15.**

---

ஆவியானவருடைய கிரியையால், மரியாளின் கருவில் தேவனுடைய நித்திய குமாரன் ஒரு தெய்வீக-மனித குழந்தையாக மாறியது எவ்வாறு சாத்தியமாயிற்று? லூக் 1:35. காலத்துக்கு உட்படாத நித்திய தேவன் எவ்வாறு காலத்துக்கு உட்பட்ட ஒரு மனிதனாக மாறினார் என்பது நம் சிந்தைக்கு அப்பாற்பட்டது. இதைத்தான் 'தேவபக்திக்குரிய இரகசியம்' என்று பவுல் சொல்கிறார். 1தீமோ 3:16.

வேதாகமத்தின் மற்ற பகுதிகளைவிட, பிலி 2-ஆம் அதிகாரத்தின் அற்புதமான பாடலில், இந்த மனத்தாழ்மையை பவுல் விரிவாகக் கூறுகிறார்.

**'அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்' (பிலி 2:6)** என்பதிலுள்ள ரூபம் என்பதற்கான கிரேக்க வார்த்தை, இயேசுவானவர் பிதாவுக்குச் சமமானவர் என்கிற அவரது தெய்வீக இயல்பைக் காட்டுகிறது. யோவான் 1:1.

**'தம்மைத்தாமே வெறுமையாக்கி' பிலி 2:7.** இயேசு உண்மையில் ஒரு மனிதனாகி, நம்மைப்போல சோதிக்கப்படுகிற நிலைக்கு வருவதற்காக தம் தெய்வீக உரிமைகளை விட்டுவிட்டார்; இந்த இரகசியம் மிகுந்த ஆச்சரியத்திற்குரியது.

**'மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும்' பிலி 2:8.** இயேசு தெரிந்துகொண்ட மரணம் மிகவும் அவமானமான மரணம். அது, 'சமாதானத்தின் ஆலோசனை' விளங்கும் இடத்தில், பிதாவுடன் போடப்பட்ட திட்டம். சக 6:13. மோசே சர்ப்பத்தை உயர்த்திய சம்பவத்திலேயே அது எடுத்துக்காட்டப்பட்டது. எண் 21:9; யோவான் 3:14. அதன்படி 'நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு' அவர் 'நமக்காகப் பாவமானார்.' 2கொரி 5:21.

**'தம்மைத்தாமே தாழ்த்தினார்' பிலி 2:8.** மனித ரூபமெடுத்ததால், சர்வலோக ராஜாவான இயேசு ஒரு அடிமையானார்; இது லூசிபரின் நோக்கத்திற்கு முற்றிலும் எதிரானது.

---

**அர்ப்பணிப்பு, தாழ்மை ஆகியவற்றிற்கு ஒரு முன்னுதாரணமாக சிலுவையைப் பார்த்து, அங்கு இயேசு நமக்காகச் செய்ததைத் தியானிப்பது எவ்வாறு நம்மை அதிக தாழ்மையுள்ளவர்களாக, தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களாக மாற்றவேண்டும்? அல்லது, மாற்றமுடியும்?**

# மேலும் படிக்க:

'ஒவ்வொரு தலைமுறையிலும் தகப்பன்மாரின் இருதயங்களிலிருந்து புறப்படுகிற அன்பானாலும், மனித ஆத்துமாக்களில் திறக்கப்படுகிற மனதுருக்கத்தின் சகல ஊற்றுகளானாலும், வற்றாத தேவன்புடன் ஒப்பிடும்போது, அது எல்லையற்ற சமுத்திரத்திற்குமுன் உள்ள ஒரு சிறிய நீரூற்று அளவே. நாவால் அதைச் சொல்லமுடியாது; பேனாவால் அதை எழுதமுடியாது. உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் அதை நீங்கள் தியானிக்கலாம்; அதைப் புரிந்துகொள்ள வேதவாக்கியங்களைக் கருத்தோடு ஆராயலாம்; பரலோகப் பிதாவின் அன்பையும் மனதுருக்கத்தையும் புரிந்துகொள்ள தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிற ஒவ்வொரு ஆற்றலையும் திறனையும் பயன்படுத்த முயற்சிக்கலாம்; ஆனாலும் அதையும் தாண்டி அறியவேண்டியது எவ்வளவோ இருக்கும். அந்த அன்பை யுகம்யுகமாக ஆராயலாம்; ஆனாலும் உலகத்திற்காக மரிக்க தம் குமாரனையே கொடுத்த தேவன்பின் ஆழத்தையும் உயரத்தையும் நீளத்தையும் அகலத்தையும் உங்களால் ஒருபோதும் முற்றிலும் புரிந்துகொள்ள முடியாது. ஆனாலும் நாம் வேதாகமத்தை ஆராய்ந்து, கிறிஸ்துவின் வாழ்க்கையையும் மீட்பின் திட்டத்தையும் தியானிக்கும்போது, இந்த மாபெரும் கருத்துகள்பற்றிய உண்மை நமக்கு அதிக அதிகமாகப் புரிய ஆரம்பிக்கும்.'[1]

'கிறிஸ்துவின் பள்ளியில் மோசே பெற்ற பயிற்சியை நாம் பெறும்போது, என்ன கற்றுக்கொள்ளலாம்? பெருமையடையலாமா? நம்மைப்பற்றி உரயர்வாக எண்ணலாமா? நிச்சயமாகக் கூடாது. இந்தப் பள்ளியில் எவ்வளவு அதிகம் கற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகம் சாந்தகுணத்திலும் மனத்தாழ்மையிலும் வளருவோம். அறிந்துகொள்ளத் தகுதியான அனைத்தையும் கற்றுவிட்டதாக நாம் எண்ணக்கூடாது. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளை நன்றாகப் பயன்படுத்தவேண்டும், நம் அழிவுள்ள தன்மையிலிருந்து அழியாமையைத் தரித்துக்கொள்ளும்போது, இங்கு பெற்றதை இங்கேயே விட்டுச்செல்லாமல், அடுத்தப் பக்கத்திற்கு நம்மோடு எடுத்துச்செல்ல வேண்டும். முடிவில்லாத நித்திய யுகங்கள் முழுவதும், கிறிஸ்துவும் அவரது மீட்பின் கிரியையுமே நம் ஆராய்ச்சியின் கருத்தாக இருக்கும்.'

[1] —Ellen G. White, Testimonies for the Church, vol. 5, p. 740.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *தேவன்பின் நிஜத்தை எந்தெந்த வழிகளில் அனுபவித்திருக்கிறீர்கள்? எந்தெந்த வழிகளில் அவரது அன்பை அறிந்தீர்கள்? அனுபவித்தீர்கள்? இதை வகுப்பில் கலந் தாலோசியுங்கள்.*

2. *இயேசு 'மனுஷர் சாயலானார்' என்பதின் அர்த்தம் என்ன? பிலி 2:7. இதை ரோமர் 8:3 உடன் ஒப்பிடவும். ஒன்றை மற்றதின் வெளிச்சத்தில் கலந்துரையாடவும்.*

3. *உங்களுடைய பகுதியில் சபையின் ஒற்றுமைக்கு சவாலாக நிற்கிற விஷயங்கள் என்ன? அந்தப் பிரச்சினைகள் என்னவாக இருந்தாலும், எதையும் 'வாதினாலாவது வீண் பெருமையினாலவது செய்யாமல்' தாழ்மையாக இருப்பது, அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட எவ்வாறு தொடக்கப்புள்ளியாக இருக்கமுடியும்?*

# பணப்பற்றாக்குறையே உண்டாகவில்லை

கென்யாவிலுள்ள கிஷுமுவில், பள்ளியிலிருந்து வீட்டிற்குச் சென்றபோது, தன் சட்டைப் பையிலுள்ள சில்லறைகளைத் தட்டிப்பார்த்துக் கொண்டே நடந்தான் பதினொரு வயது ஆல்வன் ஹரால்ட். ஒருநாள், வேதாகம ஆசிரியர் செலவுக்கு வைத்திருக்கிற காசுபற்றிப் பேசினார். "நீங்கள் செலவுக்கு வைத்திருக்கிற காசையெல்லாம் செலவுபண்ணக்கூடாது, ஓய்வுநாளில் தேவனுக்கென்று கொஞ்சம் கொடுக்கவேண்டும்" என்று சொன்னார்.

ஓய்வுநாளில் காணிக்கை பையில் காசுகளைப் போட்டான் ஆல்வான். அது அவன் அப்பா ஓய்வுநாள் காலையில் காணிக்கைக்காகக் கொடுத்த பணம். அந்தப் பணம்பற்றியும் ஆசிரியைப்பேசினார். "உங்கள் பெற்றோர் கொடுத்த பணத்தை காணிக்கையாகக் கொடுக்கும்போது, உங்கள் பெற்றோரின் பணத்தைத்தான் கொடுக்கிறீர்கள். உங்கள் பணத்தைக் கொடுக்கவில்லை" என்று சொன்னார். 'மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே' என்கிற வசனத்தை வாசித்தார்.

ஆசிரியை தன்னை குறைசொல்வதாக ஆல்வன் நினைத்தான்; அது அவனுக்குப் பிடிக்கவில்லை. பிறகு, அவர் சொல்வதும் சரியாக இருக்குமோ என்று யோசித்தான். அன்று வியாழக்கிழமை; அந்த வாரம் செலவுக்குக் கொடுக்கப்பட்ட பணத்தை எல்லாம் செலவழித்திருந்தான். எனவே, அடுத்த வாரம் காணிக்கை கொடுக்க பணத்தைச் சேர்க்கத் தீர்மானித்தான். ஆனால் அடுத்த வாரமும் பணத்தை எல்லாம் செலவழித்திருந்தான். இரண்டு மாதங்கள் கடந்தன; தன் நிலைகுறித்து வருந்தினான். காணிக்கைக்காக அவனால் பணம் சேர்க்க முடியவில்லை.

ஒருநாள், அவனும் 17 வயதான அவனது அண்ணன் ஆலனும், வீட்டிற்குச் செல்கிற வழியில் ஒரு ஐஸ்கிரீம் கடையைப் பார்த்தார்கள். ஆல்வனிடம் 20 ஷில்லிங் இருந்தது; அந்தப் பணத்திற்கு ஐஸ்கிரீம் வாங்கப் போவதாகச் சொன்னான். அவனுடைய அண்ணன் தடுத்தான். "ஐஸ்கிரீமைச் சாப்பிட்டுக் கொண்டே நடந்தால் நன்றாக இருக்காது. நீ ஐஸ்கிரீம் சாப்பிட்டுக்கொண்டு வந்தால், நான் உன்னுடன் வரமாட்டேன்" என்றான். ஆல்வனுக்கு எரிச்சலாக இருந்தது. ஐஸ்கிரீம் சாப்பிட ஆசையாக இருந்தது, ஆனாலும் அண்ணனிடம் வாக்குவாதம் செய்யவில்லை. அதனால் வாங்கவில்லை.

ஓய்வுநாள் வந்தது; அவனிடம் அந்த 20 ஷில்லிங் இருந்தது. அன்று காலையில் பெற்றோர் கொடுத்த 20 ஷில்லிங்குடன் சேர்த்து, அவனிடமிருந்த 20 ஷில்லிங்கையும் காணிக்கை தட்டில் போட்டான். தன் பணத்தை தேவனுக்குக் கொடுத்தது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தான் விரும்பிய ஒன்றை வாங்காமல் அந்தப் பணத்தை காணிக்கையாகப் போட்டதால் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது, அதனால் தனக்கு எந்த இழப்பும் இல்லை என்பதை உணர்ந்துகொண்டான்.



அடுத்த வாரம், ஆல்வன் மீண்டும் 20 ஷில்லிங்கைச் சேர்த்து, காணிக்கை போட்டான். அது மகிழ்ச்சியாக இருந்தது! ஒவ்வோர் ஓய்வுநாளிலும் 20 ஷில்லிங் காணிக்கை போட்டான், இன்று வரை காணிக்கை கொடுத்து வருகிறான். அவனுக்கு பணப்பற்றாக்குறை ஏற்பட்டதே இல்லை. முன்பு ஓய்வுநாள் வருவதற்குள்ளாக பணத்தைச் செலவிட்டுவிடுவான். இப்போது போதுமான பணம் கிடைக்கிறது.